நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.
முன்னிலை: திரு. இரா. அசோக்குமார் **B.Com, B.L .,**
நீதித்துறை நடுவர், மணப்பாறை,
2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.153/2026

(CNR NO. TNTP10-001219-2026)

சென்னை உயர்நீதிமன்றத்தின் **07.04.2021** ம் தேதியிட்ட **R.O.C.No.814/2020/RG/F1** ன் படி வழக்கின் சுருக்கம்

.....

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>துவரங்குறிச்சி காவல் நிலையம்,<br>குற்ற எண்.82/2026 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | நிஜாமுதீன்,<br>த/பெ. அப்துல் அஜீஸ் |
| குற்றப்பிரிவு | U/s.296(b), 74, 75(1)(i), 75(2), 79, 118(1), 351(3) BNS r/w 4 of TNPHW Act |
| வனையப்பட்டது | U/s.296(b), 74, 75(1)(i), 75(2), 79, 118(1), 351(3) BNS r/w 4 of TNPHW Act. |
| | எதிரி பாரதிய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவு 296(b)-ன் கீழ் குற்றமிழைத்ததற்கு 3 மாத கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.250/- செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், பாரதிய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவு 118(1)-ன் கீழ் குற்றமிழைத்ததற்கு 6 மாத கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.500/- செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், பாரதிய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவு 351(3)-ன் கீழ் குற்றமிழைத்ததற்கு 6 மாத கால சாதாரண மெய்க்காவல் |

| | |
|---|---|
| | சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.500/– செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததற்கு 6 மாத கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.500/– செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்திரவிடப்படுகிறது. மொத்த அபராதத்தொகை ரூ.1,750/–. பாரதிய சுரக்ஷா சன்ஹிதா 2023 சட்டப்பிரிவு 468–ன் கீழ் எதிரி சிறையில் இருந்த காலத்தை தண்டனை காலமாக கழிக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. தண்டனை காலத்தை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. |

குற்றம் சாட்டப்பட்டவர்கள் விபரம்

| பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|
| நிஜாமுதீன் | அப்துல் அஜீஸ் | முஸ்லீம் | கூலி | 2950, கிழக்கு 3 வது தெரு, கிழக்கு 2–வது தெரு, புதுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம். | 59/2026 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 13.03.2026 |
| புகார் கொடுத்த நாள் | : | 13.03.2026 |
| எதிரிகளை கைது செய்த நாள் | : | 14.03.2026 |
| பிணை விடுவிப்பு | : | – |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 12.05.2026 |
| விசாரணை முடிவு | : | 11.06.2026 |

| | | |
|---|---|---|
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | 14.03.2026 முதல் 18.06.2026 = 96 நாட்கள் |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 18.03.2026 |
| Date of Questioning | : | 07.05.2026 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | – |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's Chief Cross<br>PW1 12.05.2026 12.05.2026<br>PW2 12.05.2026 12.05.2026<br>PW3 12.05.2026 12.05.2026<br>PW4 12.05.2026 12.05.2026<br>PW5 04.06.2026 – |
| சட்டப்பிரிவு 351(ஆ) BNSS விசாரணை தேதி | : | 18.06.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்தவிவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| கால தாமதத்திற்கான காரணம் | : | -- |

இவ்வழக்கானது 26.03.2026 –ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 11.06.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **திரு. ஆனந்தகுமார் உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரி தரப்பில் இலவச சட்ட உதவி வழக்கறிஞர் **திரு. K. வீரமணி** அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கானது புகார்தாரர் Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 சட்டப்பிரிவு 193–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

<u>**2. குற்ற முறையீட்டின் சுருக்கம்**</u>:–

இவ்வழக்கின் புகார்தாரரான சாட்சி 1 D. பவித்ராதேவி என்பவர் திருச்சி மாவட்ட ஆயுதப்படையில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்து வந்தவர். கடந்த 08.12.2025 ஆம் தேதி முதல் துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் அயல்பணியாக பணிபுரிந்து வந்த நிலையில் எதிரி புதுக்கோட்டை நகர காவல் நிலைய குற்ற எண். 1279/2021 u/s. 379 IPC வழக்கில் நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற பழைய குற்றவாளியாக இருந்த நிலையில், கடந்த 13.03.2026–ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் சாட்சி 1 பவித்ராதேவி என்பவர் துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் அலுவல் முடித்து அவரது வீட்டிற்கு செல்வதற்காக இரவு சுமார் 09.00 மணியளவில் துவரங்குறிச்சி நூரி கிளினிக் மருத்துவமனை முன்பு காவலர் சீருடையில் பேருந்துக்காக நின்று

கொண்டிருந்தவர் திருச்சி மார்க்கம் இருந்து மதுரை மார்க்கம் நோக்கி செல்லும் TN 58 N 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து வந்து நின்றுள்ளது. அப்போது சாட்சி 1 பவித்ராதேவி பேருந்தின் முன் படிக்கட்டு வழியாக ஏறியபோது இவ்வழக்கின் எதிரி அதே படிக்கட்டு வழியாக இறங்க முற்பட்டவர் சாட்சி பவித்ராதேவி முழு காவலர் சீருடையில் இருக்கும் பெண் காவலர் என்று நன்கு தெரிந்திருந்தும், பொது இடம் என்றும் பாராமல் சாட்சி 1 ஐ மானபங்கம் செய்ய வேண்டும் என்ற குற்றமுறு எண்ணத்துடன் சாட்சி 1 – ன் இரண்டு கால்களுக்கு இடையில் முன்பக்கத்தில் கையை வைத்து அழுத்தி விரும்பத்தகாத வெளிப்படையான பாலியல் துன்புறுத்தல் செய்தும், சாட்சி 1–ன் மானத்திற்கு பங்கம் விளைவித்தும் குற்றம் புரிந்துள்ளார். அதனால் சாட்சி 1 பதறிப்போய் எதுக்குடா கையை விடுறா என்று கேட்டதற்கு எதிரி பொது இடம் என்றும் பாராமல் அப்படித்தாண்டி புண்டா மவளே பண்ணுவேன், நீ போலீஸ் யூனிபார்ம்ல வந்தா பெரிய ஆளு மயிறா என்று தகாத வார்த்தைகளால் திட்டி சாட்சி 1–ன் இடது கையை பிடித்து முறுக்கி சாட்சி 1–ன் முகத்தில் கையால் குத்தி கீழே தள்ளியுள்ளார். எதிரியின் தாக்குதலால் சாட்சி 1 நிலைகுழைந்து கீழே விழுந்ததும், எதிரி நிஜாமுதீன் கீழே கிடந்த கல்லை எடுத்து சாட்சி 1–ன் நெற்றியில் ஓங்கி அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தி அந்த கல்லைக் காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார். எனவே, எதிரியின் குற்றச்செய்கையானது 296(b), 74, 75(1)(i), 75(2), 79, 118(1), 351(3) BNS r/w 4 of TNPHW Act –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக துவரங்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3.வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்:</u>**

குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், எதிரிக்கு வழக்காவணங்களின் நகல் U/S.**230 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023**(கு.வி.மு.ச பிரிவு 207)–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிக்கு எதிராக பிரிவு **263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023–ன்** (கு.வி.மு.ச. பிரிவு 240(1))–ன் படி U/s.296(b), 74, 75(1)(i), 75(2), 79, 118(1), 351(3) BNS and 4 of TNPHW Act–ன்படி குற்றச்சாட்டு வனையப்பட்டு, பிரிவு 263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 (கு.வி.மு.ச.240(2)) பிரிவின் கீழ் எதிரியிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**<u>4. விசாரணை:–</u>**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :–</u>**

(5.1) அ.சா.1 திருமதி. பவித்ராதேவி (இரண்டாம் நிலை காவலர்) தனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் தற்போது துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், சம்பவ சமயத்தில் மேற்படி காவல்நிலையத்தில் தான் பணிபுரிந்தேன் என்றும், என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்

என்றும், மேற்படி புகாரை நான் தான் கொடுத்தேன் என்றும், ஆஜர் எதிரியை சம்பவ சமயத்தில் பேருந்தில் பார்த்த வகையில் எனக்கு தெரியும். 13.03.2026 அன்று நான் அலுவலகல் பணியை முடித்துவிட்டு மதுரைக்கு செல்வதற்காக இரவு 09.00 மணியளவில் துவரங்குறிச்சி காவல்நிலையத்திற்கு எதிரே உள்ளே பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன் என்றும், அப்போது TN 58 N 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து அங்கு வந்தததது என்றும், அப்போது பேருந்திலிருந்து பயணிகள் இறங்கியதும் நான் பேருந்தில் முதல்படி வழியாக ஏறினேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி பேருந்தில் இருந்தார் என்றும், அவர் அவரது கையை எனது இரண்டு கால்களுக்கு இடையிலும் தவறான நோக்கத்தோடு முன்பக்கம் வைத்தார் என்றும், அதை கேட்டதற்கு நான் அப்படித்தான் கைவைப்பேன் புண்டமகளே யூனிப்பார்மல இருந்த நீ என்ன ஆளுமயிரா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி எனது இடது கையை பிடித்து முகத்தில் குத்தி என்னை கீழேதள்ளிவிட்டார் என்றும், நான் பேருந்தில் இருந்து கீழே விழுந்துவிட்டேன் என்றும், பேருந்திலிருந்து கீழே இறங்கிய எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து கல்லால் எனது முகத்தில் குத்தினார் என்றும், அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. மேற்படி காயங்களுக்கு எனக்கு தையல் போடப்பட்டுள்ளது என்றும், (சாட்சி அவரது இரத்த காயத்தழும்பை காட்டுகிறார்) எதிரி என்னை கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும், எதிரி சம்பவ சமயத்தில் மதுபோதையில் இருந்ததாக தெரிந்தது என்றும், காயமடைந்த என்னை அங்கியிருந்த ஆட்டோ டிரைவர்கள் மீட்டு அருகிலிருந்த நூர் எனும் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், அங்கு முதலதுவி சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், அங்கியிருந்து மேல் சிகிச்சைக்காக துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சென்ற எனக்கு அங்கு எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு தையல்போடப்பட்டது என்றும், இது குறித்து நான் புகார் அளித்தேன் என்றும், ஆஜர் எதிரியை குறித்து விசாரித்ததில் அவரது பெயர்

நிஜாம்மைதீன் என்றும், புதுக்கோட்டையை சேர்ந்தவர் என்று தெரியவந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 திரு. கார்த்திகைசாமி (அரசு பேருந்து நடத்துநர்) என்பவர் தனது சாட்சியத்தில் நான் தற்போது தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் சிப்காட் போக்குவரத்து பணிமனையில் அரசு பேருந்து நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், அ.சா.1 பவித்ரா தேவியை தெரியும். சம்பவ சமயத்தில் நான் பணிபுரிந்த பேருந்தில் ஏறிய போது பார்த்த வகையில் தெரியும் என்றும், 13.03.2026 அன்று TN 58 N 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை மதுரை மாட்டுத்தாவணியிலிருந்து ஓட்டுநர் இராமகிருஷ்ணன் ஓட்டிவரஅந்த பேருந்தில் நான் நடத்துநராக வந்தேன் என்றும், திருச்சி பஞ்சப்பூர் பஸ்நிலையத்திலிருந்து பேருந்தை சுமார் மாலை 07.45 மணியளவில் எடுத்து மதுரை நோக்கி ஓட்டி வந்துகொண்டிருந்தோம் என்றும், விராலிமலையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு துவரங்குறிச்சி காவல்நிலைய பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இரவு 08.45 மணியளவில் இறக்கிவிட்டேன் என்றும், அப்போது பயணிகள் அந்த பேருந்தில் ஏறும் போது அப்போது ஒரு பெண் காவலர் பேருந்தில் ஏற முயற்சி செய்தார் என்றும், அப்போது பேருந்திலிருந்து கடைசியாக இறங்கிய நபர் அந்த பெண் காவலரின் நெஞ்சில் கைவைத்து தள்ளினார் என்றும், அந்த பெண் காவலர் அவரது கையை தடுத்து கண்ணத்தில் அறைந்தார் என்றும், அதனையெடுத்து அந்த நபர் அந்த பெண் காவலரை தள்ளி அவரை தாக்கினார் என்றும், அங்கு கீழே கிடந்த கல் போன்றவற்றை எடுத்து பெண் காவலரை முகத்தில் தாக்கினார் என்றும், அதில் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், தொடர்ந்து பதறியடித்து நானும், பேருந்தில் பயணம் செய்த நபர்களும், ஆட்டோ நபர்களும் அந்த நபரிடமிருந்து அந்த பெண் காவலரை மீட்டோம் என்றும், அந்த நபர் பெண் காவலரை உன்னை கொல்லாமல்

விடமாட்டேன் மயிரு என்று திட்டினார் என்றும், ஆஜர் எதிரிதான் அந்த பெண் காவலரை தாக்கிய நபர் ஆவார் என்றும், அவர் அன்று வெள்ளைநிற பேண்ட், சட்டை ஆடை அணிந்திருந்தார் என்றும், அந்த பெண் காவலரை நாங்கள் அருகிலிருந்த நூர் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றும், இது குறித்து துவரங்குறிச்சி போலீசார் விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 திரு. பக்ருதீன் (ஆட்டோ டிரைவர்) என்பவர் தனது சாட்சியத்தில் நான் துவரங்குறிச்சியில் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றும், அ.சா.1 பவித்ரா தேவியை தெரியும். சம்பவ சமயத்தில் பேருந்து நிலையத்தில் இருந்தபோது பார்த்த வகையில் தெரியும் என்றும், 13.03.2026 அன்று மாலை 09.00 மணியளவில் நான் ஆட்டோ ஸ்டாண்டில் காசிமுகமுது உள்ளிட்ட ஆட்டோ ஓட்டுநரான நண்பர்கள் நின்றுகொண்டிருந்தோம் என்றும், அப்போது TN 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்திலிருந்து ஆஜர் எதிரி நிஜாமுதீன் பேருந்திலிருந்து இறங்கினார் என்றும், அப்போது அந்த பெண்காவலர் பவித்ராதேவி பேருந்தில் ஏறுவதற்காக இருந்தார் என்றும், அப்போது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், பேருந்து நிறுத்தம் கீழே எதிரி பவித்ராதேவியை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அடிக்க ஆரம்பித்தார் என்றும், தொடர்ந்து அவர் கல்லை எடுத்து அந்த பெண்ணை தாக்கியதில் வலது புருவத்திற்கு மேலே இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரியை அருகிலிருந்த காவல்நிலைய போலீசார் பிடித்து கொண்டு சென்றார்கள் என்றும், காயமடைந்த அந்த பெண்ணை நூர் கிளினிக்கில் முதலுதவி செய்தார்கள் என்றும், ஆஜர் எதிரியை போலீசார் விசாரித்த போது அவரது பெயர், விபரம் தெரிந்தது என்றும், அவர் பேருந்திலிருந்து இறங்கும்

போது  நடந்தது பற்றி எனக்கு தெரியாது என்றும், தகராறு போது நாங்கள் தடுப்பதற்கு முன்பே ஆஜர் எதிரி அந்த பெண் காவலரை அடித்துவிட்டார் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் என்றும், மேற்படி ஆவணத்தில் என்னுடன் காசிமுகமது கையொப்பம் செய்தார் என்றும், போலீசார் மறுநாள் காலை தகராறு நடந்த இடத்தில் என்ன நடந்தது என்று விசாரித்தார்கள் என்றும், அதற்காக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும், நாங்கள் அதில் கையெழுத்து செய்தோம் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4. திரு. முகமது காசிம் (ஆட்டோ டிரைவர்) என்பவர் தனது சாட்சியத்தில் நான் துவரங்குறிச்சியில் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றும்,  அ.சா.1 பவித்ரா தேவியை தெரியும் என்றும், சம்பவ சமயத்தில்  பேருந்து நிலையத்தில் இருந்தபோது பார்த்த வகையில் தெரியும் என்றும், 13.03.2026 அன்று மாலை சுமார்  09.00 – 09.15 மணியளவில் நான் ஆட்டோ ஸ்டாண்டில் எனது நண்பர் பக்ரூதீன், உள்ளிட்டோரும் அங்கு 4, 5 நபர்களும் இருந்தோம் என்றும், அப்போது அந்த பெண்காவலர் பவித்ராதேவி பேருந்தில் ஏறுவதற்காக நின்றுகொண்டிருந்தார் என்றும்,  அந்த  TN 58 N  2657  என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து வந்து நின்றது என்றும், ஆஜர் எதிரி நிஜாம்தீன் பேருந்திலிருந்து இறங்கினார் என்றும், அப்போது அந்த பெண்காவலர் பவித்ராதேவி பேருந்தில் ஏறுவதற்காக இருந்தார் என்றும், அப்போது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரியை கீழே இறங்கியதும் அவர் அந்த  பெண் போலீஸ்  சட்டையை பிடித்து அடித்தார் என்றும், தொடர்ந்து பேருந்து நிறுத்தம் கீழே எதிரி பவித்ராதேவியை அசிங்கமான வார்த்தைகளால்

திட்டி அவர் கல்லை எடுத்து அந்த பெண்ணை தாக்கியதில் வலது புருவத்திற்கு மேலே இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரியை அருகிலிருந்த காவல்நிலைய போலீசார் பிடித்து கொண்டு சென்றார்கள் என்றும், காயமடைந்த அந்த பெண்ணை நூர் கிளினிக்கில் முதலுதவி செய்தார்கள் என்றும், ஆஜர் எதிரி குறித்து விசாரித்த போது அவரது பெயர், விபரம் தெரிந்தது என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டவாது கையெழுத்து என்னுடையதுதான் என்றும், மேற்படி ஆவணத்தில் என்னுடன் பக்ருதீன் கையொப்பம் செய்தார் என்றும், போலீசார் மறுநாள் காலை தகராறு நடந்த இடத்தில் என்ன நடந்தது என்று விசாரித்தார்கள் என்றும், சம்பவ இடத்தில் போலீசார் வரைபடம் தயார் செய்து அதற்காக பார்ம் எழுதி எங்களிடம் அங்கு வைத்து கையெழுத்து பெற்றார்கள் என்றும், நாங்கள் அதில் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ச.பொ.1 கல்லால் தான் எதிரி அந்த பெண்ணைதாக்கினார் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5. திரு. ரகுமான்கான் (காவல் உதவி ஆய்வாளர்) என்பவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் தற்போது துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 13.03.2026 அன்று இரவு 10.30 மணியளவில் நான் நிலைய அலுவலில் இருந்த போது பவித்ராதேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அந்த புகாரின் அடிப்படையில் துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.82/2026 u/s.296(b),74, 118(1),75(2),75(1)(1), 79, 351(3) BNS r/w 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணக்கு எடுத்துக்கொண்ட நான் 13.03.2026 அன்று இரவு 11.15 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் பக்ருதீன்,

காசிம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையொப்பம் பெற்றேன் என்றும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட ஒழுங்கற்ற கல்லை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், தொடர்ந்து இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்தது உண்மை என தெரியவந்ததால் அவரை இரவு 01.00 மணியளவில் அடையாளம் கண்டு துவரங்குறிச்சி பேருந்து நிலையம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றும், இவ்வழக்கில் காயமடைந்த பவித்ராதேவி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மாரிஜியா என்பவரை விசாரித்து அவர் காயமடைந்தோருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை பெற்றேன் என்றும், அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன் என்றும், பவித்ராதேவி அவர்களை மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து 18.03.2026 அன்று எதிரி நிஜாம்முதீன் எதிராக கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

## 6. பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 351(ஆ) பிரிவின்படியான நடவடிக்கை:

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான தோன்றிய விஷயங்கள் குறித்து **பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம்** 351(1)(b)

பிரிவின்படி கேள்விகள் கேட்க எதிரி தரப்பில் சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். பின்பு எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததன் பெயரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u>:–**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது எதிரியின் செய்கையானது பாரதிய நியாய சங்கீதா சட்டப்பிரிவு U/s. 296(b), 74, 75(1)(i), 75(2), 79, 118(1), 351(3) BNS r/w 4 of TNPHW Act.ன் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

(1) பிரிவு 296 ஆபாச செயல்களும், பாடல்களும் மற்றவர்களுக்கு தொந்தரவாக இருக்கும்படி ஒரு பொது இடத்தில் ஆபாச செயல் எதையும் செய்கிற அல்லது ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாச பாடல்கள் கதை பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற ஒப்பிக்கிற அல்லது மொழிகிற எவராயினும் மூன்று மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓராயிரம் ரூபாய் வரை தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவு 351 குற்றமுறு மிரட்டல் எவர் ஒருவர் மற்றவர்களுடைய உடலுக்கு பெயருக்கு அல்லது சொற்றுக்கு அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள ஒருவரின் உடலுக்கு அல்லது பெயருக்கு கெடுதல் விளைவிப்பதாக அவருக்கு பீதி விளைவிக்கும் உள்நோக்கத்துடன் அல்லது அத்தகைய மிரட்டும் நிறைவேற்றப்படுவதை தவிர்க்கும் பொருட்டு அவர் சட்டப்படி செய்ய

கட்டுப்பட்டிராத செயல் எதனையும் செய்யாது விட்டு விடுதலை உண்டாக்க அச்சுறுத்துகிற எவர் ஒருவரும் குற்றம் ஒரு மிரட்டலை செய்கிறார்

(3) குற்றமுறு மிரட்டலை செய்கிற எவர் ஒருவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகை இரண்டில் ஒன்று அல்லது தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(4) அச்சுறுத்தலானது மரணம் அல்லது கொடுங்காயம் போன்றவற்றை ஏற்படுத்துவதாக இருந்தால் அச்சுறுத்தலானது மரணம் அல்லது கொடுங்காயம் ஏற்படுத்துவதாக அல்லது சொத்து எதையும் தீயினால் அழிவதை விளைவிப்பதாக அல்லது மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லது ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய கால அளவுக்கு சிறை தண்டனையோ விதித்து தண்டிக்கப்படுவதற்குரிய ஒரு குற்றத்தை விளைவிப்பதாக அல்லது ஒரு பெண்ணின் மாண்புக்கு களங்கம் ஏற்படுத்துவதாக இருக்குமானால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்க கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகை இரண்டில் ஒன்று அல்லது தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**8. பிரிவு 74: பெண்ணின் மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் தாக்குதல் அல்லது வன்முறையை உபயோகித்தல்:** ஏதேனும் ஒரு பெண்ணின் மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் அல்லது தாக்குதலை அல்லது குற்றம் ஒரு வன்முறையை உபயோகிப்பதால் தான் அதை அனேகமாக ஏற்படுத்த கூடும் என்பதை தெரிந்தே அப்பெண்ணெய் தாக்குகிற அல்லது அவரிடம் குற்றம் ஒரு வன்முறையை உபயோகிக்கிற எவர் ஒருவரும் ஒரு வருடத்திற்கு குறையாத ஆனால் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு

வருட கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று அல்லது தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**9. பிரிவு 75 பாலியல் துன்புறுத்தல் ஒரு ஆண் பின்வரும் ஏதேனும் செயலை செய்தால்,**

1. உடல் ரீதியான மற்றும் விரும்பத்தகாத வெளிப்படையான பாலியல் தூண்டலுக்கு முற்படுதல் அல்லது பாலியல் இணக்கத்திற்கான கோரிக்கை அல்லது வேண்டுகோள் விடுத்தல் அல்லது அவரது விருப்பத்திற்கு மாறாக ஆபாச படங்களை காட்டுதல் அல்லது பாலியல் குற்றத்திற்கு ஆளாக்கும் வண்ணம் பாலியல் நோக்கம் உடைய சங்கேதங்களை தெரிவித்தல்

குற்றத்தை செய்திடும் எவர் ஒருவரும் மூன்று வருடங்கள் வரை நீட்டிக்க கடுங்காமல் சிறை தண்டனை அல்லது தண்டத்துடன் அல்லது இரண்டும் சேர்த்து விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்

**10. பிரிவு 79 ஒரு பெண்ணின் மானத்திற்கு பங்கம் விளைவிக்க உள்நோக்கம் கொண்டு சொல் செயல் அல்லது சைகை:** ஒரு பெண்ணின் மானத்திற்கு பங்கம் விளைவிக்கும் உள்நோக்கத்துடன் வந்த பெண்ணால் ஒரு சொல் அல்லது ஒளி கேட்கப்பட வேண்டும் அல்லது ஒரு சைகை அல்லது பொருள் பார்க்கப்பட வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் அத்தகைய சொல் எதனையும் சொல்கிற ஒலி அல்லது செய்கை எதையும் செய்கிற அல்லது பொருள் எதையும் காண்பிக்கிற அல்லது அந்தரங்கத்தில் தலையிடுகிற எவர் ஒருவரும் மூன்றாண்டுகள் வரை நீடிக்க கூடிய கால அளவுக்கு சாதாரண சிறை தண்டனையோ அல்லது தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**11. தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழ் ஒரு பெண்ணை பொது இடங்களில் அல்லது கல்வி நிறுவனம், பேருந்து நிறுத்தம், சாலை, ரயில் நிலையம், பூங்கா, கடற்கரை போன்ற இடங்களில் தொந்தரவு செய்தால் அல்லது அதற்கு உடந்தையாக இருந்தால் அதிகபட்சம் 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் குறைந்தபட்சம் ரூ.10,000/– விதிக்கப்படலாம்.**

12. மேற்படிவீதம், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 மொத்தம் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(அ). அரசு தரப்பில் வாதுரைத்த கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரை**

அரசு தரப்பில் எதிரி மீதான வழக்கு குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு, அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருள்.1 ஆகியவை குறியீடு செய்யப்பட்டு, எதிரி மீதான வழக்கு குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்கி உத்திரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

**(ஆ). எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரிதான் வழக்கு குற்ற சம்பவத்தை செய்தாரா**?** என்பது அரசு தரப்பில் போதுமான சாட்சிகளை விசாரித்து**,** எதிரி மீதான வழக்கு குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை**.** எதிரி திருடியதை நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை**.** எனவே**,** அரசு தரப்பு வழக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதால் சந்தேகத்தின்

பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து உத்திரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

13. இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டது. சாட்சியங்கள், வழக்கு ஆவணங்கள் கூர்ந்து பரிசீலிக்கப்பட்டது.

**14.** சாட்சிய, சான்றாவண பரிசீலனை, முடிவு, அதற்கான காரணங்கள் **(Discussion, Conclusion, Reason for conclusion)**

**14.1.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.**1** முதல் அ.சா.**5** வரையிலான சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் அவர்கள் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் அ.சா.ஆ.**1** முதல் அ.சா.ஆ.**9** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்.**1** ஆகியவற்றின் மூலமாக எதிரி மீதான வழக்கு குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசீலிக்கையில்,

15. அ.சா.1 திருமதி. பவித்ராதேவி (இரண்டாம் நிலை காவலர்) தனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் தற்போது துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், சம்பவ சமயத்தில் மேற்படி காவல்நிலையத்தில் தான் பணிபுரிந்தேன் என்றும், என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், மேற்படி புகாரை நான் தான் கொடுத்தேன் என்றும், ஆஜர் எதிரியை சம்பவ சமயத்தில் பேருந்தில் பார்த்த வகையில் எனக்கு தெரியும். 13.03.2026 அன்று நான் அலுவலகல் பணியை முடித்துவிட்டு மதுரைக்கு செல்வதற்காக இரவு 09.00 மணியளவில் துவரங்குறிச்சி காவல்நிலையத்திற்கு எதிரே உள்ளே பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன் என்றும், அப்போது TN 58 N 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து அங்கு வந்தது என்றும்,

அப்போது பேருந்திலிருந்து பயணிகள் இறங்கியதும் நான் பேருந்தில் முதல்படி வழியாக ஏறினேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி பேருந்தில் இருந்தார் என்றும், அவர் அவரது கையை எனது இரண்டு கால்களுக்கு இடையிலும் தவறான நோக்கத்தோடு முன்பக்கம் வைத்தார் என்றும், அதை கேட்டதற்கு நான் அப்படித்தான் கைவைப்பேன் புண்டமகளே யூனிப்பார்மல இருந்த நீ என்ன ஆளுமயிரா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி எனது இடது கையை பிடித்து முகத்தில் குத்தி என்னை கீழேதள்ளிவிட்டார் என்றும், நான் பேருந்தில் இருந்து கீழே விழுந்துவிட்டேன் என்றும், பேருந்திலிருந்து கீழே இறங்கிய எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து கல்லால் எனது முகத்தில் குத்தினார் என்றும், அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. மேற்படி காயங்களுக்கு எனக்கு தையல் போடப்பட்டுள்ளது என்றும், (சாட்சி அவரது இரத்த காயத்தழும்பை காட்டுகிறார்) எதிரி என்னை கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும், எதிரி சம்பவ சமயத்தில் மதுபோதையில் இருந்ததாக தெரிந்தது என்றும், காயமடைந்த என்னை அங்கியிருந்த ஆட்டோ டிரைவர்கள் மீட்டு அருகிலிருந்த நூர் எனும் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், அங்கு முதலதுவி சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், அங்கியிருந்து மேல் சிகிச்சைக்காக துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சென்ற எனக்கு அங்கு எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு தையல் போடப்பட்டது. இது குறித்து நான் புகார் அளித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேலும் Bharatiya Nyaya Sanhita (BNS) சட்டப்பிரிவு 296(b) யின் உட்கூறுகளுக்கு உட்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளார்களா என பார்க்கும்போது சம்பவத்தில் காயம் அடைந்ததாக சொல்லும் சாட்சியைத் தவிர பிற சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக விசாரித்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆபாசமாக திட்டியதால் தங்களுக்கு

அவமானமாகவோ, அருவருப்பாகவோ இருந்தது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆபாசமாக திட்டியதால் தங்களுக்கு அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டது என்று அ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் முன் தீர்ப்பான in Re Na.Madhanagopal and anr vs k.Lalitha dated 10.10.20022 பக்கம் எண் ஐந்து மற்றும் ஆறின்படி ஆபாசமான வார்த்தைகள் பேசுவது மட்டுமே Bharatiya Nyaya Sanhita (BNS) சட்டப்பிரிவு 296(b)–ன் சட்ட உட்கூறுகளுக்கு உட்பட்டு அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிகள் சந்தேகத்திற்கு இடமின்றி இந்த குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட Bharatiya Nyaya Sanhita (BNS) சட்டப்பிரிவு 296(b)–யின் கீழான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அமைந்துள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. மேலும் அ.சா.1 எதிரிகள் குறித்தும் அவர்களின் குற்றமுறு செய்கை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 Bharatiya Nyaya Sanhita (BNS), 118(1). 351(3) மற்றும் பிரிவு 4 பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டத்தின் கீழான உட்கூறு குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் 13.03.2026 அன்று நான் அலுவலகல் பணியை முடித்துவிட்டு மதுரைக்கு செல்வதற்காக இரவு 09.00 மணியளவில் துவரங்குறிச்சி காவல்நிலையத்திற்கு எதிரே உள்ளே பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது TN 58 N 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து அங்கு வந்தது. அப்போது பேருந்திலிருந்து பயணிகள் இறங்கியதும் நான் பேருந்தில் முதல் படி வழியாக ஏறினேன். அப்போது ஆஜர் எதிரி பேருந்தில் இருந்தார். அவர் அவரது கையை எனது இரண்டு கால்களுக்கு இடையிலும் தவறான நோக்கத்தோடு முன்பக்கம் வைத்தார். அதை கேட்டதற்கு நான் அப்படித்தான் கைவைப்பேன் புண்டமகளே யூனிப்பார்மல இருந்த நீ என்ன ஆளுமயிரா என்று அசிங்கமான

வார்த்தைகளால் திட்டி எனது இடது கையை பிடித்து முகத்தில் குத்தி என்னை கீழேதள்ளிவிட்டார். நான் பேருந்தில் இருந்து கீழே விழுந்துவிட்டேன். பேருந்திலிருந்து கீழே இறங்கிய எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து கல்லால் எனது முகத்தில் குத்தினார். அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. மேற்படி காயங்களுக்கு எனக்கு தையல் போடப்பட்டுள்ளது. (சாட்சி அவரது இரத்த காயத்தழும்பை காட்டுகிறார். ) எதிரி என்னை கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டினார். மேலும் எதிரியானவர் சம்பவத்தின்போது மதுபோதையில் இருந்ததாக தெரிந்தது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றேன். அங்கு எனக்கு தையல் போடப்பட்டது என்றும், அதன்பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், மருத்துவர் காயம்பட்ட நபரை பரிசோதனை செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதாகவும், மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அவரது சாட்சியமானது எதிரிக்கு எதிரான பிரிவு 118(1) ல் உள்ள உட்கூறுகளின்படி அரசு தரப்பு வழக்கானது அரசு தரப்பு வழக்கினை நிலைநாட்டும் வகையில் அமைந்துள்ளது.

18. அ.சா.2 மற்றும் அ.சா.3 வழக்கு சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். அவர்களின் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் அவர்கள் அனைவரும் எதிரி குறித்தும் வழக்கு விவரம் குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார், போலீசார் அவர்களை விசாரணை செய்து விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்கள். அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமான சாட்சியாக உள்ளது என்பது தெரியவருகிறது. அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த எதிரியை அடையாளம் காட்டியுள்ளார்கள். அவர்கள் எதிரியின் குற்றமுறு செய்கை குறித்து அரசு தரப்பில்

சொல்லப்படுகின்ற வழக்கு சம்பவம் குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, அவர்களது சாட்சியும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது. மேற்கண்ட சாட்சியத்தின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

19. அ.சா.2. தனது சாட்சியத்தில் துவரங்குறிச்சி காவல்நிலைய பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இரவு 08.45 மணியளவில் இறக்கிவிட்டேன் என்றும், அப்போது பயணிகள் அந்த பேருந்தில் ஏறும் போது அப்போது ஒரு பெண் காவலர் பேருந்தில் ஏற முயற்சி செய்தார் என்றும், அப்போது பேருந்திலிருந்து கடைசியாக இறங்கிய நபர் அந்த பெண் காவலரின் நெஞ்சில் கைவைத்து தள்ளினார் என்றும், அந்த பெண் காவலர் அவரது கையை தடுத்து கன்னத்தில் அறைந்தார் என்றும், அதனையெடுத்து அந்த நபர் அந்த பெண் காவலரை தள்ளி அவரை தாக்கினார் என்றும், அங்கு கீழே கிடந்த கல் போன்றவற்றை எடுத்து பெண் காவலரை முகத்தில் தாக்கினார் என்றும், அதில் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், தொடர்ந்து பதறியடித்து நானும், பேருந்தில் பயணம் செய்த நபர்களும், ஆட்டோ நபர்களும் அந்த நபரிடமிருந்து அந்த பெண் காவலரை மீட்டோம் என்றும், அந்த நபர் பெண் காவலரை உன்னை கொல்லாமல் விடமாட்டேன் மயிரு என்று திட்டினார் என சாட்சியம் அளித்துள்ளார்.

20. அ.சா.3. தனது சாட்சியத்தில் TN 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்திலிருந்து ஆஜர் எதிரி நிஜாமுதீன் பேருந்திலிருந்து இறங்கினார் என்றும், அப்போது அந்த பெண்காவலர் பவித்ராதேவி பேருந்தில் ஏறுவதற்காக இருந்தார் என்றும், அப்போது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், பேருந்து நிறுத்தம் கீழே எதிரி பவித்ராதேவியை அசிங்கமான வார்த்தைகளால்

திட்டி அடிக்க ஆரம்பித்தார் என்றும், தொடர்ந்து அவர் கல்லை எடுத்து அந்த பெண்ணை தாக்கியதில் வலது புருவத்திற்கு மேலே இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. அ.சா.4. தனது சாட்சியத்தில் TN 58 N 2657 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து வந்து நின்றது என்றும், ஆஜர் எதிரி நிஜாம்தீன் பேருந்திலிருந்து இறங்கினார் என்றும், அப்போது அந்த பெண்காவலர் பவித்ராதேவி பேருந்தில் ஏறுவதற்காக இருந்தார் என்றும், அப்போது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரியை கீழே இறங்கியதும் அவர் அந்த பெண் போலீஸ் சட்டையை பிடித்து அடித்தார் என்றும், தொடர்ந்து பேருந்து நிறுத்தம் கீழே எதிரி பவித்ராதேவியை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவர் கல்லை எடுத்து அந்த பெண்ணை தாக்கியதில் வலது புருவத்திற்கு மேலே இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

22. அரசு தரப்பில் இறுதியாக புலன் விசாரணை செய்த அதிகாரி அவர்கள் அ.சா.5 ஆக விசாரிக்கபட்டார். அவர் தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்தும், எதிரி கைது செய்யப்பட்ட குறித்தும், சம்பவ இடத்தில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியது குறித்தும், எதிரி மீது குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அவரது சாட்சியத்தினை ஒத்துரைக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளார்கள். இந்த வழக்கின் புகார்தாரரே புகார் வாக்குமூலத்தை ஒத்துரைக்கும் வகையில் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளித்துள்ளார். அடுத்ததாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் எதிரிக்கும், அரசு தரப்பு வழக்கிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கின்

புலன் விசாரணை அதிகாரி மற்ற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

23. மேலே கண்ட அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் புகார்தாரர் பெண் என்பதால் எதிரி தாக்கினார் என்றோ, பெண்மைக்கு களங்கம் ஏற்படும் வகையில் நடந்துகொண்டார் என்றோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சியங்கள் வாயிலாக Bharatiya Niyaya Sanhita பிரிவு 74, 75(2), 75(1)(i), 79 ஆகிய பிரிவுகளில் உள்ள உட்கூறுகள் குறித்து சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. மேலேகண்ட பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**24. மேலும், நாகராஜ் எதிர் அரசுக்காக ஆய்வாளர் அவர்கள் Criminal Appeal No.518/2007, 08.02.2017–ம் தேதியன்று மாண்புமிகு நீதியரசர் பாரதிதாசன் அவர்கள் வழங்கியுள்ள தீர்ப்பானது இந்த வழக்கிற்கு பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது.**

**25. மேலும், தனபால் எதிர் அரசு என்ற வழக்கில் பெண்ணுக்கு மன உளைச்சல், அவமானம், அச்சம் அல்லது தொல்லை ஏற்படுத்தும் செயல் நடந்தது என்பதை நம்பகமான சாட்சிகள் மற்றும் ஆதாரங்கள் மூலம் நிரூபித்தால் பிரிவு 4–ன் கீழ் தண்டனை வழங்கலாம் என தீர்ப்பு வழங்கியுள்ளது.**

26. அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அளித்துள்ள சாட்சியங்களின் வாயிலாகவும், சான்றாவணங்களின் வாயிலாகவும் மேலேகண்ட

தீர்ப்பின் அடிப்படையில் இந்நிர் வழக்கானது 296(b), 118(1), 351(3) Bharatiya Niyaya Sanhita மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டத்தின் கீழான அனைத்து உட்கூறுகளும் நிலை நாட்டப்பட்டுள்ளது.

27. மேலும் Bharatiya Niyaya Sanhita பிரிவு 74, 75(2), 75(1)(i), 79 ஆகிய பிரிவுகளில் உள்ள உட்கூறுகள் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிலைநாட்டப்படவில்லை என இந்த நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

28. ஆனால் தற்போதைய அரசு தரப்பு வழக்கில் மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) Bharatiya Niyaya Sanhita மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டத்தின் கீழான அனைத்து உட்கூறுகளும் நிலை நாட்டப்பட்டுள்ளது. எனவே, இச்சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரி தண்டிக்கத்தக்க குற்றத்தை செய்துள்ளார் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரி சட்டப்பிரிவு 296(b), 118(1), 351(3)Bharatiya Niyaya Sanhita மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**29.** இவ்வழக்கில் R.P.No. 49/2026–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான சுமார் 1/2 கிலோ எடைகொண்ட ஒழுங்கற்ற கருங்கல்லான வழக்குச்சொத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசு விதிகளின்படி அழிக்க உத்திரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 18–ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

30. எதிரிக்கு, வழங்கப்போகும் தண்டனை குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023 சட்டப்பிரிவு பிரிவு 271(2) ன் கீழ் விசாரணை

| | |
|---|---|
| கேள்வி | உன்னை பாரதிய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவு 296(b), 118(1), 351(3) Bharatiya Niyaya Sanhita மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. உனக்கு வழங்கப்போகும் தண்டனை குறித்து என்ன சொல்கின்றாய்? |
| எதிரியின் பதில் | தெரியாமல் செய்துவிட்டேன். நான் சிறையில் இருந்த காலங்களை தண்டனை காலமாக கருதி விடுதலை செய்ய வேண்டுகிறேன் என பதில் அளித்தார். |

என பதிலளித்தார்.

31. எதிரி, தெரியாமல் செய்துவிட்டேன். நான் சிறையில் இருந்த காலங்களை தண்டனை காலமாக கருதி விடுதலை செய்ய வேண்டுமென கோரியுள்ளதையும், வழக்கு சம்பவத்தையும், வழக்கின் சூழ்நிலையையும் கருத்தில்கொண்டு பார்க்கையில், வழக்கானது பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டாக இருப்பதால், எதிரி குற்றவாளி நன்னடத்தை கண்காணிப்பு விடுதலை சட்டத்தின் கீழான பலனை பெற அருகதையில்லை. அதே நேரம் எதிரியின் வயது முதிர்வை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு

குறைந்தபட்ச தண்டனை வழங்கி திருந்தி வாழ வாய்ப்பளிப்பது, நீதியின் பொருட்டு அவசியமானது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

## 32. தண்டனை தீர்ப்பு விவரம்

**எதிரி பாரதிய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவு 296(b)-ன் கீழ் குற்றமிழைத்ததற்கு 3 மாத கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.250/- செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், பாரதிய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவு 118(1)-ன் கீழ் குற்றமிழைத்ததற்கு 6 மாத கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.500/- செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், பாரதிய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவு 351(3)-ன் கீழ் குற்றமிழைத்ததற்கு 6 மாத கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.500/- செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததற்கு 6 மாத கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், அபராதம் ரூ.500/- செலுத்த வேண்டும் என்றும், அபராத தொகையை செலுத்த தவறினால் அதற்காக மேலும், கூடுதலாக 2 வார கால சாதாரண மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்திரவிடப்படுகிறது. மொத்த அபராதத்தொகை ரூ.1,750/- .**

**33. பாரதிய சுரக்ஷா சன்ஹிதா 2023 சட்டப்பிரிவு 468-ன் கீழ் எதிரி சிறையில் இருந்த காலத்தை தண்டனை காலமாக கழிக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. தண்டனை காலத்தை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. எதிரி நிஜாமுதீன் 14.03.2026 முதல் இன்று 18.06.2026-ம் தேதி வரை சிறைக்காவலில் இருந்து வருகிறார்.**

34. தீர்ப்பின் சான்றிட்ட நகலினை இப்பொழுதே எதிரிக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.06.18 17:42:00 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

**இணைப்பு:**
**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1. | : | திருமதி. பவித்ராதேவி (இரண்டாம் நிலை காவலர்) |
| அ.சா.2. | : | திரு. கார்த்திகைசாமி (அரசு பேருந்து நடத்துநர்) |
| அ.சா.3 | : | திரு. பக்ருதீன் (ஆட்டோ டிரைவர்) |
| அ.சா.4 | : | திரு. முகமது காசிம் (ஆட்டோ டிரைவர்) |
| அ.சா.5 | : | திரு. ரகுமான்கான் (காவல் உதவி ஆய்வாளர்) |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | : | புகார் மனு |
| அ.சா.ஆ.2. | : | பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து (பக்ருதீன்) |
| அ.சா.ஆ.3. | : | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து (முகமது காசிம்) |
| அ.சா.ஆ.4 | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | : | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | : | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | : | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | : | படிவம் 91 |

**<u>அரசு தரப்பில் சான்று பொருட்கள்</u>**:

சா.பொ.1 – சுமார் 1/2 கிலோ எடை கொண்ட ஒழுங்கற்ற கருங்கல் – 1

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** <u>இல்லை</u>

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.06.18 17:41:48 +0530

நீதித்துறை நடுவர்

மணப்பாறை.

**<u>பின்குறிப்பு:–</u>**

1) வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2) எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.